# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 10 | கர்நாடக சங்கீதம்<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. இந்திய சங்கீதத்தில் எல்லா வாத்தியங்களுக்கும் அரசியாகத் திகழும் இசைக்கருவி
1) வயலின் 2) புல்லாங்குழல் 3) மிருதங்கம் 4) வீணை

02. "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் பாடலை இயற்றியவர்
1) மாயூரம் வேதநாயகம்பிள்ளை 2) பாபநாசம் சிவன்
3) தியாகராஜ சுவாமிகள் 4) பொன்னையாப்பிள்ளை

03. இசைத் தமிழின் நான்கு வகைகளுள் சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் சிறந்து விளங்குவது
1) முதனடை 2) வாரம் 3) கூடை 4) திரள்

04. பண்ணிசையில் "திறம்" எனப்படுவது
1) சம்பூர்ணராகம் 2) ஷாடவராகம் 3) ஔடவராகம் 4) ஸ்வராந்தர ராகம்

05. "ருத்ர-மா" இ ராக மானது
1) ஹரஹரப்ரியா 2) சங்கராபரணம் 3) கல்யாணி 4) தோடி

06. புல்லாங்குழலில் மிக உயர் சுருதியை உண்டாக்கும் துளை
1) முகரத்திரத்துளை 2) தாரதந்திரத்துளை 3) முத்திரைத்துளை 4) மந்திரத்துளை

07. சபாகான உருப்படி அல்லாதது
1) வர்ணம் 2) கீதம் 3) தில்லானா 4) கீர்த்தனை

08. பஜனைப் பத்ததியின் தந்தை எனப்படுபவர்
1) தாளப்பாக்கம் சின்னையா 2) தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார்
3) பல்லவி சேஷய்யர் 4) ஸ்வாதித் திருநாள் மகாராஜா

09. "எத்துக்கடைப் பல்லவி" என்னும் அங்கத்தைக் கொண்டுள்ள இசை உருப்படி
1) கீர்த்தனை 2) இராகமாலிகை 3) வர்ணம் 4) ஜதிஸ்வரம்

10. சுருதி நிர்ணயிக்கப்பட்ட ஏகத்வனி வாத்தியம்
1) வீணை 2) புல்லாங்குழல் 3) தவில் 4) நாதஸ்வரம்

11. ஸரிமபநிஸ - ஸ்நிபமரிஸ என்னும் ஆரோகண அவரோகணத்தையுடைய இராகம்
1) மோகனம் 2) பிலஹரி 3) மத்தியமாவதி 4) ஹம்சத்வனி

12. பேரின்பப் பதங்களை இயற்றியவர்
1) முத்துத்தாண்டவர் 2) முத்துஸ்வாமி தீட்சிதர் 3) பாபநாசம் சிவன் 4) சியாமா சாஸ்திரிகள்

13. தமிழ்நாடு கலைவளம் பெற்று விளங்கிய காலம்
1) சங்ககாலம் 2) சங்கமருவிய காலம் 3) பல்லவர் காலம் 4) சோழர்காலம்

14. முழுவதும் கோமள ஸ்வரங்களையே எடுத்துக்கொள்ளும் இராகம்
1) ஹரிகாம்போஜி 2) ஹரஹரப்ரியா 3) தோடி 4) கல்யாணி

15. ஸ்வரங்கள் வரிசைக் கிரமமின்றி திரிந்து திரிந்து வருதல்
1) வக்ரம் 2) வர்ஜம் 3) ஸ்வராந்தரம் 4) பாஷாங்கம்

16. பின்வருவனவற்றுள் சுத்தாங்கமாகப் பாடுவது
1) திருவிசைப்பா 2) தேவாரம் 3) திருப்புகழ் 4) கீதம்



kalvi.lk

17. ஓர் அலங்காரம் எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனங்கள்
1) 8 2) 10 3) 4 4) 9

18. "சந்தப்பாவலர்" என்று போற்றப்படுபவர்
1) தியாகராஜ சுவாமிகள் 2) முத்துஸ்வாமி தீட்சிதர் 3) அருணகிரிநாதர் 4) திருஞானசம்பந்தர்

19. பதவர்ணத்தின் வேறொரு பெயர்
1) தானவர்ணம் 2) சௌக்கவர்ணம் 3) இராகமாலிகாவர்ணம் 4) நவராகமாலிகாவர்ணம்

20) ஸ்வரஸ்தானங்கள்
1) 7 2) 10 3) 12 4) 8

21. பின்வருவனவற்றுள் தீவிர ஸ்வரம் அல்லாதது
1) அந்தரகாந்தாரம் 2) பிரதிமத்திமம் 3) காகலி நிஷாதம் 4) சுத்ததைவதம்

22. அடதாளத்தின் முதல் லகுவை நீக்கினால் வரும் தாளம்
1) திரிபிடை தாளம் 2) மட்டியதாளம் 3) ஜம்பைதாளம் 4) துருவதாளம்

23. தனது தாய் இராகத்தில் அல்லாத வேறு இராகத்தின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளும் இராகம்
1) உபாங்கராகம் 2) ஜன்னிய ராகம் 3) வக்ரராகம் 4) பாஷாங்கராகம்

24. தமிழிசையில் "உழை" எனப்படுவது
1) ஸட்ஜம் 2) ரிஷபம் 3) காந்தாரம் 4) மத்திமம்

25. "தகிட தகதிமி" என்னும் ஜதிக்குரிய தாளநடை
1) திஸ்ரநடை 2) கண்டநடை 3) சங்கீர்ணநடை 4) மிஸ்ரநடை

26. மேலைத்தேச இசையில் "மேஜர் ஸ்கேல்" எனும் ராகம்
1) ஹரஹரப்பிரியா 2) சங்கராபரணம் 3) கல்யாணி 4) தோடி

27. இனி நமக்கொரு கவலையுமில்லை
என்றும் இன்பமே..... மனமே
இப்பாடல் அமைந்துள்ள உருப்படி வகை
1) கீதம் 2) வர்ணம் 3) கீர்த்தனை 4) ஸ்வரஜதி

28. மேலே குறிப்பிட்ட பாடல் அமைந்துள்ள இராகம்
1) மோகனம் 2) கல்யாணி 3) மத்தியமாவதி 4) பிலஹரி

29. அவ் ராகத்தின் ஆரோகண அவரோகணம்
1) ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ
2) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ்
3) ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ
4) ஸரிகபநிஸ் ஸ்நிபகரிஸ

30. இவ்வுருப்படி எவ் இசை வகையைச் சார்ந்தது?
1) அப்பியாச கானம் 2) சபாகானம் 3) நாட்டார் பாடல் 4) மெல்லிசைப்பாடல்

31. "லங்கர்" என்னும் பாகத்தினை உடைய இசைக்கருவி
1) தம்புரா 2) வீணை 3) புல்லாங்குழல் 4) வயலின்

32. "முல்லைப்பண்" என்னும் இராகம்
1) பிலஹரி 2) ஹம்சத்வனி 3) மோகனம் 4) ஆரபி

33. இந்திய அரசின் "பத்ம பூஷண" விருதினைப் பெற்றவர்
1) பாபநாசம் சிவன் 2) தியாகராஜ சுவாமிகள் 3) சியாமாசாஸ்திரிகள் 4) முத்துத்தாண்டவர்

34. மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம்
1) தைவதாந்திய இராகம் 2) பஞ்சமாந்திய இராகம் 3) நிஷாதாந்திய இராகம் 4) பாஷாங்க ராகம்

35. ஹிந்துஸ்தானி இசையில் "பைரவதாட்" எனப்படும் இராகம்
1) தோடி 2) கல்யாணி 3) சங்கராபரணம் 4) மாயா மாளவகௌளை

26. நன்றாக சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவில் ஒலிக்கும் ஸ்வரங்கள்
1) சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம்
2) சதுஸ்ருதி தைவதமும், சாதாரண காந்தரமும்
3) அந்தரகாந்தாரமும், சதுஸ்ருதி ரிஷபமும்
4) சதுஸ்ருதி தைவதமும், அந்தரகாந்தாரமும்

37. ஜனக ராகங்கள்
1) 65 2) 75 3) 72 4) 70



kalvi.lk

38. சப்த தாளங்களில் அதிகூடிய அட்சர எண்ணிக்கையினைக் கொண்ட இரு தாளங்கள்

1) அடதாளம், ஜம்பைதாளம்
2) ஜம்பைதாளம், துருவதாளம்
3) திரிபிடைதாளம், மட்டியதாளம்
4) துருவதாளம், அடதாளம்

39. சங்கீத "பிதாமகர்" எனப்படுபவர்

1) தியாகராஜர்
2) புரந்தரதாசர்
3) பாபநாசம் சிவன்
4) முத்துத்தாண்டவர்

40. பண் "செந்துருத்தி" எனப்படும் இராகம்

1) ஹம்சத்வனி
2) மத்தியமாவதி
3) பிலஹரி
4) மோகனம்

(40×1=40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினாவிற்கும், ஏனைய வினாக்களுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து, மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமான விடை தருக.

1. வர்ணத்தின் இரு பிரிவுகள் எவை? (2 புள்ளிகள்)
2. துளைக் கருவிகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
3. "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்" என்று பாடியவர் யார்? (1 புள்ளி)
4. குடுமியாமலை இசைக்கல்வெட்டு எம் மன்னனின் இசைப்புலமைக்கு சான்று பகர்கின்றது? (1 புள்ளி)
5. தானத்தினை சிறப்புற வாசிக்கக்கூடிய வாத்தியம் எது? (1 புள்ளி)
6. இராக தாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில் மிகப்பழமையான உருப்படி எது? (1 புள்ளி)
7. ஸாரீ;;ககரிக இச் சுரக்கோர்வையின் மொத்த அட்சரம் யாது? (1 புள்ளி)
8. ஜாதி மாற்றமடையும் தாள அங்கம் எது? (1 புள்ளி)
9. கண்ட ஜாதி அடதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கை யாது? (1 புள்ளி)
10. காந்தர்வ வேதம் எனப்படுவது எது? (1 புள்ளி)

மொத்தம் (12 புள்ளிகள்)

02. விரும்பிய ஓர் இராகத்திற்கு இலட்சணம் தருக. (சஞ்சாரம், உருப்படியுடன்)

1) கல்யாணி
2) ஹரஹரப்பிரியா

(12 புள்ளிகள்)

03. 1) உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் மிகப் பழமையான துளைக்கருவி எது? (2 புள்ளிகள்)
2) அதன் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)
3) அவ்வாத்தியத்தின் அமைப்பையும், வாசிக்கும் முறையினையும் தருக. (5 புள்ளிகள்)

மொத்தம் (12 புள்ளிகள்)

04. இந்தியாவின் 14ம், 15ம் நூற்றாண்டின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்குக. (12 புள்ளிகள்)

05. 1) பண்ணிசையின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக. (5 புள்ளிகள்)
2) பண்களையும் பண்ணிற்கு இணையான இராகங்களையும் எழுதுக. (7 புள்ளிகள்)

மொத்தம் (12 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் ஒன்றினது இலட்சணத்தை உதாரணத்துடன் எழுதுக.

1) வர்ணம்
2) ஸ்வரஜதி
3) ஜதிஸ்வரம்

(12 புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page